தினகரன் வாரமஞ்சரி epaper

# கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு

## கேள்விமனு இலக்கம்: MI/FIN/32/38/01 (II)

## பயன்படுத்தப்பட்ட வாகனங்களை விற்பதற்கு விலைமனு கோரல்

**01. விலைமனு கோரல்**

கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு செயலாளர் சார்பில் அமைச்சு பெறுகைக் குழு தலைவரினால், அமைச்சின் பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்ட ஆனால் தொடர்ந்து பயன்படுத்த முடியுமான நிலையில் உள்ள பயன்படுத்தப்பட்ட ஆறு (06) வாகனங்களை விற்பதற்காக பகிரங்க விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**02. வாகனங்களை பரீட்சிப்பது**

விற்பதற்காக முன்வைத்திருக்கும் கீழ் குறிப்பிடப்பட்ட வாகனங்களை 2026 ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதி தொடக்கம் 2026 நவம்பர் மாதம் 09 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை அமைச்சு வளாகத்தில் பரீட்சிக்க முடியும்.

**அட்டவணை இலக்கம் 01 – பயன்படுத்தப்பட்ட, பயன்படுத்த முடியுமான நிலையில் இருக்கும் வாகனங்கள்**

| இலக்கம் | வாகன இலக்கம் | வகை/ வடிவம் | எரிபொருள் வகை | உற்பத்தி ஆண்டு | 2026 ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டு பெறுமதி ரூபா | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை ரூபா | வேறு விடயங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 65-5XXX | Volvo-S 80 | டீசல் | 1999 | 2,000,000/- | 75,000/- | |
| 2 | KB-4XXX | Hyundai-Tucson | பெற்றோல் | 2006 | 3,800,000/- | 75,000/- | வாகன பதிவுச் சான்றிதழின் நகல் பிரதி உள்ளது |
| 3 | KQ-1XXX | Volvo-S 80 | டீசல் | 2011 | 5,400,000/- | 75,000/- | |
| 4 | KO-1XXX | Audi – A6 2.0 LT | பெற்றோல் | 2011 | 6,100,000/- | 75,000/- | ரூபா 35,001/- சுங்க வரி தொகை ஒன்றை செலுத்துவற்கு உட்பட்டது |
| 5 | KY-3XXX | Land Rover - Discovery | டீசல் | 2014 | 19,500,000/- | 100,000/- | ரூபா 850,332/- சுங்க வரி தொகை ஒன்றை செலுத்துவற்கு உட்பட்டது |
| 6 | CAU-2XXX | BMW – 740 LE | பெற்றோல்/ மின்சாரம் | 2017 | 25,500,000/- | 100,000/- | |

**குறிப்பு**

i. மேலுள்ள அட்டவணையில் "2026 ஆம் ஆண்டுக்காக மதிப்பீட்டு பெறுமதி" என குறிப்பிடப்பட்டுள்ள பத்தி மூலம் ஒவ்வொரு வாகனத்திற்காகவும் மதிப்பீட்டு குழு ஒன்றினால் தீர்மானிக்கப்பட்ட மதிப்பீட்டு பெறுமதி தரப்பட்டுள்ளது. குறித்த மதிப்பீட்டு பெறுமதியை விஞ்சும் விலைமனுக்களை சமர்ப்பித்திருக்கும் விலைமனுதாரர்கள் இடையே அதிக கூறுவிலை சமர்ப்பிக்கும் விலைமனுதாரருக்கு குறித்த வாகனத்தை விற்பதற்கு வகை செய்யப்படும்.

ii. மேலுள்ள அட்டவணையில் இலக்கம் 01 வரிசை இலக்கம் 4 மற்றும் 5 இன் கீழ் குறிப்பிடப்பட்ட வாகனங்கள் சுங்கவரி சலுகையின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டிருப்பதால், அந்த வாகனங்களுக்கு வெற்றிகரமான விலைமனுதாரர்களால் அங்கீகரிக்கப்பட்ட விலைமனு தொகையை அமைச்சு சிறாப்பருக்கு செலுத்துதல் வேண்டும். அதன் பின் மேலுள்ள அட்டவணையில் குறித்த வாகனத்திற்கு முன்னால் பத்தியில் குறிப்பிடப்பட்ட "வேறு விடயங்கள்" சுங்க வரித் தொகை இலங்கை சுங்கத்திற்கு செலுத்துதல் வேண்டும். சுங்க வரி தொகையை செலுத்திய பின் அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டு அல்லது குறித்த கொடுப்பனவை உறுதி செய்யும் ஆவணத்தை மோட்டார் வாகன திணைக்களத்திற்கு சமர்ப்பித்த பின், குறித்த வாகனத்தின் உரிமையை வழங்கும் செயற்பாட்டை மேற்கொள்ள முடியும்.

**03. விலைமனு ஆவணங்களை பெறுதல்**

2026 ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதி தொடக்கம் 2026 நவம்பர் மாதம் 09 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரையான காலத்தில் ரூபா 5,000 மீளளிக்கப்படாத கட்டணம் ஒன்றை அமைச்சு சிறாப்பருக்கு செலுத்துதல் வேண்டும். அந்த கொடுப்பனவுக்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டை அமைச்சின் பெறுகைக் குழுவுக்கு சமர்ப்பித்த பின் விலைமனு ஆவணங்களை பெற முடியும்.

**04. மீளளிக்கப்படும் வைப்புத் தொகை**

விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கும் அனைத்து வாகனங்களுக்கும் அட்டவணை இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்டவாறு வெவ்வேறாக மீளளிக்கப்படும் வைப்புத் தொகை ஒன்றை செலுத்துதல் வேண்டும். அந்த வைப்புத் தொகையை செலுத்துவதை உறுதி செய்யும் பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றை (பொது 172) ஆவணத்துடன் சமர்ப்பிப்பது அவசியமாகும். இந்தத் தேவையை பூர்த்தி செய்ய தவறுகின்ற விலைமனுக்கள் பரிசீலிப்பதற்கு தகுதி பெற மாட்டாது.

**05. விலைமனுக்களை ஏற்றல் மற்றும் திறப்பது**

முறையாக பூர்த்தி செய்த முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2026 நவம்பர் மாதம் 10 ஆம் திகதி பி.ப. 02.00 இற்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு தலைவர், அமைச்சு பெறுகைக் குழு, கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு, இலக்கம் 73/1, காலி வீதி, கொழும்பு 03 என்ற முகவரிக்கு அனுப்புவது அல்லது பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதற்கு முடியும். விலைமனுக்கள் 2026 நவம்பர் மாதம் 10 ஆம் திகதி பி.ப. 02.00 இற்கு அமைச்சு கேட்போர்கூடத்தில் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்திற்கு குறித்த விலைமனுதாரருக்கு அல்லது அவரது அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு பங்கேற்க முடியும்.

**06. போக்குவரத்துச் செலவு மற்றும் சுங்கவரி செலுத்தல்**

கொள்வனவு செய்யப்படும் வாகனம் அமைச்சு வளவில் இருந்து அகற்றி ஓட்டுவதற்கு ஏற்படும் அனைத்து செலவுகளையும் குறித்த வாகனங்களை வாங்கும் தரப்பினரால் ஏற்றல் வேண்டும். சுங்கவரிச் சலுகையின்கீழ் இறக்குமதி செய்யப்பட்டுள்ள வாகனங்களை கொள்வனவு செய்யும்போது, வெற்றிகரமான விலைமனுதாரரினால் அங்கீகரிக்கப்பட்ட விலைமனு தொகையை வெவ்வேறாக செலுத்தி, வாகனத்தை கொள்வனவு செய்தல் மற்றும் அதன் உரிமையை தமக்கு பெறுவதற்கு தேவையான பணிகளை பூர்த்தி செய்தல் வேண்டும்.

**07. உரிமை வழங்கல் மற்றும் பொறுப்புகளை மட்டுப்படுத்தல்**

மேல் குறிப்பிடப்பட்ட வாகனத்தை விற்றதன் பின்னர், அவற்றின் உரிமையை வழங்குவதற்கு தேவையான ஆவண செயற்பாடுகள் அமைச்சினால் செய்து தரப்படும். உரிமை வழங்கப்பட்ட பின்னர், அவ்வாறு விற்பனையில் இருந்து அகற்றப்படும் வாகனங்கள் தொடர்பில் அமைச்சினால் தொடர்ந்தும் எந்தவொரு பொறுப்பும் ஏற்கப்படமாட்டாது.

**08. மேலதிக விபரங்கள்**

இது தொடர்பில் மேலதிக விபரங்களை கீழுள்ள தொலைபேசி இலக்கங்கள் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும்

- வாகன பிரிவு: 011-2392149/ நீடிப்பு 241
- பெறுகை இலக்கம்: 011-2347392/ நீடிப்பு 266

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு**
**இலக்கம் 73/1, காலி வீதி, கொழும்பு 03.**